# <u>மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,திண்டுக்கல்</u>

**திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் நத்தம் வேடசந்தூர்,ஒட்டன்சத்திரம்,பழனி,கொடைக்கானல்,நிலக்கோட்டை தாலுகா சட்டப்பணிகள் குழுவில் பணிபுரிய தயார் செய்யப்படும் சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் 2017-2018 பட்டியலில் தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்வதற்கான அறிவிக்கை:-**

## (Notification)

வெளியிடுபவர்:-தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திண்டுக்கல்.

நாள்:-12.05.2017.
வெள்ளிக்கிழமை.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு ,திண்டுக்கல் மற்றும் தாலுகா சட்டப்பணிகள்குழுநத்தம்,வேடசந்தூர்,ஒட்டன்சத்திரம்,பழனிகொடைக்கானல் ,நிலக்கோட்டைஆகிய இடங்களில் இயங்கிவரும் மேலே கண்ட அலுவலகங்களில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் திட்டங்களை செயல்முறைப்படுத்த தயார் செய்யப்படும் 2017-2018 ம் ஆண்டுக்குரிய சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் பட்டியலில் சேர்க்கப்பட தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>விண்ணப்பதாரர்களின் தகுதிகள்:-</u>**

1.திண்டுக்கல் மாவட்டத்தில் குடி இருந்து வருபவராக இருக்க வேண்டும்.

2.குறைந்தபட்சம் 10 ம்வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3.நொடிப்பு நிலையராக முடிவு காணப்பட்டவராக இருத்தல் கூடாது.

4.ஏதாவது ஒரு குற்றத்திற்காக விசாரணையை எதிர்கொள்பவராக இருத்தல் கூடாது.

5.31.05.2017 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்,உயர்ந்தபட்ச வயது வரம்பு இல்லை.

**<u>கீழே சொல்லப்பட்ட நபர்களும் விண்ணப்பிக்கலாம்:-</u>**

1.ஆசிரியர்கள்(ஒய்வு பெற்றவர்கள் உட்பட)

2.ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்.

3.சமூக நலம் பற்றி கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.

4.அங்கன்வாடி பணியாளர்கள்.

5.மருத்துவர்கள்.

6.சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை மட்டும்)

7.அரசியல் சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள்.

8.மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள்.

9.நன்னடத்தையுள்ள தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

10.ஏற்கனவே சட்டப்பணிகள் தன்னார்வலர் பட்டியலில் உள்ள நபர்கள்.

**<u>தேர்வு முறை:-</u>**

சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் தாங்கள் பணி செய்ய விரும்பும் மேலே கண்ட சட்டப்பணிகள் குழுவினை விண்ணப்பத்தில் தெரிவித்திடல் வேண்டும்.2017-2018 ம் ஆண்டிற்கான சட்டப்பணிகள் தன்னார்வலர்கள் பட்டியலில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி ,மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும்

செயலாளர்,மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,தலைவர்கள் தாலுகா சட்டப்பணிகள் குழு மற்றும் தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி ,மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்படும் நபரைக் கொண்ட குழுவால் ஒரு நேர்முகத் தேர்விற்குப் பின்னர் தேர்வு செய்யப்படுவார்கள்.

**<u>பணியின் தன்மை:-</u>**

2017-2018 சட்டப்பணிகள் தன்னார்வலர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும் நபர்களில் இருந்து அவ்வப்போது சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் பணிகளுக்கு வேண்டிய தன்னார்வலர்கள் அழைக்கப்படுவார்கள்.இவர்கள் அவ்வப்போது மாவட்ட மற்றும் தாலுகா சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் ஒதுக்கப்படும் பணிகளைச் செய்திடல் வேண்டும்.

**<u>பணிக்கான மதிப்பூதியம்:-</u>**

ஒரு நபர் 2017-2018 சட்டப்பணிகள் தன்னார்வலர் பட்டியலில் சேர்க்கப்படுவதாலேயே அவருக்கு ஊதியமோ அல்லது சம்பளமோ வழங்கப்படல் மாட்டாது.தன்னார்வலர்களுக்கு ஒதுக்கப்படும் பணியினை நிறைவேற்றும் போது அவர்களுக்கு அவ்வப்போது தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவினால் வரையறை செய்யப்பட்டுள்ள மதிப்பூதியம் வழங்கப்படும்.தற்போது சட்டப்பணிகள் தன்னார்வலர்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ள மதிப்பூதியம் நாள் ஒன்றுக்கு ரூ250/-மட்டும்.

**<u>சட்டப்பணிகள் தன்னார்வலர் பயிற்சி:-</u>**

தேர்வு செய்யப்படும் சட்டப்பணிகள் தன்னார்வலர்களுக்கு 5 நாட்கள் பயிற்சி வழங்கப்படும்.

**முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்:-31.05.2017.**

**முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:-**

**தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,**

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகம்,**

**மாவட்ட நீதிமன்ற வளாகம்,**

**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,(V.N வளாகம்)**

**திண்டுக்கல்.**

மேலே கண்ட முகவரிக்கு விண்ணப்பங்கள் நேரடியாக 15.05.2017 முதல் 31.05.2017 வரை அலுவலக நேரமான காலை 10 மணி முதல் 5.45 மணி வரை சமர்ப்பிக்கலாம்.மற்றும் தபால் மூலமாக மேலே கண்ட முகவரிக்கு 31.05.2017ம் தேதி மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தோடு தங்களது குறைந்தபட்ச கல்வித் தகுதிக்கான கல்வி சான்றிதழின் ஒளிப்படநகலையும் ,ஒரு சுயமுகவரியிட்ட ரூ30 க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட உறையினையும் இணைத்திடல் வேண்டும்.

(கையொப்பம் K.முரளிசங்கர்)
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திண்டுக்கல்.

//உத்திரவுப்படி//
செயலாளர்/சிவில் நீதிபதி(முதுநிலை பிரிவு)
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திண்டுக்கல்.

**2017-2018 சட்டப்பணிகள் தன்னார்வலர் பட்டியலில் சேர்வதற்கான விண்ணப்பப்படிவம்.**

| தொடர்பு முகவரி :-<br><br><br><br>அலைபேசி :-<br><br>மின்னஞ்சல் :- | புகைப்படம் |
|---|---|

1.பெயர் :-

2.தகப்பனார்/கணவர் பெயர் :-

3.கல்வித்தகுதி :-

4.சாதி :-

5.தற்போதைய தொழில் :-

6.எந்த ஊரில் உள்ள சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் சேர்க்கப்படல் வேண்டும் டிக் செய்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திண்டுக்கல் | நத்தம் | வேடசந்தூர் | ஒட்டன்சத்திரம் | பழனி | கொடைக்கானல் | நிலக்கோட்டை |

7.கணினி சான்றிதழ் :-

8.தனித்த திறமை :-

9.முழு நேரப் பணி புரிய முடியுமா? :-

10.தொண்டுநிறுவனராக இருந்தால் தொண்டு நிறுவன முகவரி :-

11.ஏற்கனவே சட்டப்பணிகள் தன்னார்வலராக பணி புரிந்துள்ளீரா :- ஆம்/இல்லை

தேதி:- கையொப்பம்.

# APPLICATION FOR THE ROLL OF PLV 2017-2018.

| | |
|---|---|
| **CONTACT ADDRESS:-**<br><br><br><br>**MOBILE:-**<br>**EMAIL:-** | **A FFIX YOUR PHOTO** |

**1.NAME :-**

**2.FATHER'S /HUSBAND'S NAME :-**

**3.EDUCATIONAL QUALIFICATION :-**

**4.COMMUNITY :-**

**5.PRESENT OCCUPATION :-**

**6.APPLICANTs PREFERATION FOR SERVE IN THE FOLLOWING PLACE TICK THE BOX.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Dindigul** | Natham | Vedasanthur | Oddanchatram | Palani | Kodaikanal | Nilakkottai |

**7.COMPUTER KNOWLEDGE :-**

**8.EXTRA CURRICULAR ACTIVITIES :-**

**9.WHETHER WILLING TO WORK :-**
**FULL TIME**

**10.IF RUN A NGO NAME AND**
**ADDRESS OF THE NGO :-**

**11.ALREADY SERVE AS A PLV :- YES/NO**

**DATE:-** **SIGNATURE**